[திரு. சி.வி. சண்முகம்] [2020 செப்டம்பர் 16

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/ 2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2020 செப்டம்பர் 16]

****மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/ 2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, சொல்லுங்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில திருத்தங்களை நாங்கள் முன்மொழிய விரும்புகின்றோம். ஓர் அறக்கட்டளை என்பது* author of the trust *ஆல் உருவாக்கப்படும். அந்த* author trustees-*ஐ நியமித்துவிடுவார்;* Chairman-*ஐ நியமித்துவிடுவார். எந்த நோக்கத்திற்காக அந்த* trust *அமைக்கப்படுகிறது என்பதற்கான விவரங்களை அவரே செய்துவிடுவார். அது பதிவு செய்யப்பட்ட ஒன்று. கூட்டுறவுச் சங்கத்தினுடைய பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இன்றைக்கு அந்த* author *இருக்க மாட்டார்;* trustees-*ம் இருக்கமாட்டார்கள்; அவர்கள் மாறியிருப்பார்கள். ஆனால், இப்போது நீங்கள் கொண்டுவருகிற இந்தச் சட்டத்தில், புதிதாக பதிவு செய்யப்பட்ட நோக்கம், இடம் இவற்றையெல்லாம் குறிப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒரு* trust *பதிவு செய்யப்பட்டிருக்குமேயானால், அதற்குப் பிறகு* codicil *என்று சொல்லப்படுகிற திருத்தங்கள்,* amendments *தான் கொண்டுவர முடியும், அல்லது அதனை புதிதாகப் பதிவு செய்யவேண்டுமானால், அந்த* trust-*ஏ* invalid *ஆகிவிடும். அப்போது,* dissolution of the trust *போட்டாக வேண்டும். அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல், ஒவ்வொரு* trust-*க்கும் எவ்வளவு* amendment *வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், எவ்வளவு* codicil *வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். இந்தச் சட்டத்தில் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது அதனால் நாங்கள் இதைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள், நீதிமன்றத்திலேயே எடுத்துச் சொல்லியிருக்கலாம், தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது*

@ 16–9–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. எஸ். ரகுபதி] [2020 செப்டம்பர் 16

போன்ற கதைதான். ஏனென்றால், இதில் நீங்கள் என்னென்ன disqualifications சொல்கிறீர்களோ அவை அனைத்தும் trust deed-ல் நிச்சயமாக இருக்கும்; members-க்கு disqualification இல்லாமல் எந்த trust deed-ம் பதியப்பட மாட்டாது. யார் யாரெல்லாம் member ஆக இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைத் தகுதிகள் உள்ளிட்ட மற்ற தன்மைகளும் அதில் இருக்கின்றன. அதனால், பொது அறக்கட்டளையை திரும்பவும் register செய்வது சிரமமான ஒன்று.

பிற்பகல் 3-20

பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தைக் கொடுங்கள் என்று உடனே சொல்வீர்கள். அந்த விண்ணப்பத்தைக் கொடுத்தாலுமே அது புதிதாகப் பதிவு செய்வதைப்போல் ஆகிவிடும். எனவே, ஏழாவது பிரிவிலே நீங்கள் codicil ஒரு திருத்தத்தை, amendment-ஐக் கொண்டுவந்து, மாநிலத்திலுள்ள பொது அறக்கட்டளையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டத்தினுடைய ஷரத்துக்களை இந்த அறக்கட்டளை ஏற்று, அதன்படி செயல்படும் என்று ஒரு திருத்தம் கொண்டுவந்தாலே போதும். எனவே, ஏழாவது பிரிவில் மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. ஏனென்றால், ஒரு trust-ஐ திரும்ப, திரும்ப புதிதாகப் பதிய முடியாது; codicil போடலாம். அதாவது amendment போடலாம். எனவே நீங்கள் amendment ஆக அதில் சேர்த்துக்கொண்டீர்களென்று சொன்னால், எல்லா trust-க்கும் சரியாக இருக்கும். இல்லையென்றால் பல வழக்குகளைத்தான் சந்திக்க வேண்டும். யாருக்கும் முடியாது. ஒரு author, ஒரு நோக்கத்திற்காகக் கொண்டுவந்த trust-ல் இன்னொரு author-ஐக் கொண்டுவந்து நுழைக்க முடியாது. எனவே, இருக்கக்கூடிய, அறங்காவலரைப் பொறுப்பாளராகச் சேர்க்கச் சொல்லியிருக்கிறீர்கள். அதைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. இதிலுள்ள disqualification எல்லாமே அந்த சட்டங்களில் வருகிறது. எனவே, இதிலே திருத்தங்கள் கொண்டுவந்து, Trust Act-ல் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையிலே திருத்தம் கொண்டுவந்து, இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று திருத்தம் கொண்டுவந்தாலே போதுமான ஒன்று. அது மிகச் சுலபமான ஒன்று. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய திருத்தங்கள்—பொதுவாக இந்தியாவிலே இரண்டு வகையாக சட்டங்கள் உள்ளன. தனியார் அறக்கட்டளைகள், பொது அறக்கட்டளைகள். தனியார் அறக்கட்டளை என்பது The Indian Trusts Act, 1882-ன்படி நிருவகிக்கப்படுகிறது. அதற்கான சட்ட விதிமுறைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பொது அறக்கட்டளையைப் பொறுத்தவரை, இதுவரை அதற்கென்று தனியாக ஒரு சட்டம் இல்லை. The Charitable and Religious Trusts Act, 1920 என்று ஒரு சட்டம் இருக்கிறது. எப்படி ஓர் அறக்கட்டளை உருவாக்கப்பட வேண்டும், அந்த அறக்கட்டளையின் நோக்கங்கள் என்ன? அந்த அறக்கட்டளையில் யார் யாரெல்லாம் உறுப்பினர்களாக வருவதற்கு தகுதிகள் என்ன? அதில் தவறு ஏற்பட்டால் அந்த தவறுகள் எப்படி நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றி எந்தவிதமான சட்டவிதிகள் The Charitable and Religious Trusts Act, 1920-ல் விரிவாக இல்லை. நடைமுறை சிக்கல்களைத் தீர்ப்பதற்குத்தான் அதில் வழி வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பொது அறக்கட்டளையிலேயே நிருவாகிகளுக்கான முழுமையான சட்ட விதிகள் இதுவரைக்கும் இல்லை. ஆனால், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலே பொது அறக்கட்டளைக்கென்று தனியாக சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் அப்படி இல்லை. ஆகவேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல பல ஆண்டுகளுக்கு முன்பு பல நல்ல நோக்கத்திற்காக, சமுதாய நோக்கத்திற்காக, பொது நல நோக்கத்திற்காக, கல்வி நோக்கத்திற்காக, பல்வேறு அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; உண்மை. ஆனால், அந்த அறக்கட்டளைகளின் நோக்கம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? நிறைவேற்றப்பட்டு அவற்றின் சொத்துகள் முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கிறதா என்றால், அது இன்றைக்கு மிகப் பெரிய ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. அன்றைக்கு நல்ல நோக்கத்தில், நல்ல முறையில் அந்த அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டன; ஆனால், இன்றைக்கு நிலைமை என்ன?

உதாரணத்திற்கு ஆளவந்தார் அறக்கட்டளை; அதற்கு ஆயிரம் காணி ஆளவந்தார் என்று பெயர். ஆனால், அந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டதன் நோக்கம் என்ன? அந்த நோக்கம் இன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? அதன் சொத்துக்கள் இன்றைக்கு அந்த அறக்கட்டளையினுடைய பாதுகாப்பில் இருக்கிறதா என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த ஆயிரம் ஏக்கர் நிலம் இன்றைக்கு அந்த அறக்கட்டளையில் இருக்கிறதா என்றால் இல்லை. யாரிடம் இருக்கிறதென்றே தெரியவில்லை. யார் அதை நிருவகிப்பது. அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதா? நீதிமன்றம் தலையிட்டு Scheme Decree கொடுத்து, Hindu Religious and Charitable Endowment Board வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நிலைமை என்ன? இன்றைக்கு ஒரு ரூபாய்கூட வருமானம் இல்லை. அதனுடைய நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. இப்படி பல்வேறு அறக்கட்டளைகள் உள்ளன. பச்சையப்பா அறக்கட்டளை, பி.டி. செங்கல்வராயன் அறக்கட்டளை என்று பல்வேறு அறக்கட்டளைகள் 200 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நல்ல நோக்கத்திற்காக, சமுதாய நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக, கல்வி வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகள். இன்றைக்கு அத்தனையும் நீதிமன்றத்திலே நிலுவையில் இருந்து, நீதிமன்றம் Scheme Decree போட்டு, அதற்கு நிருவாகிகளை நியமித்து, இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்பட்ட வேண்டும். நல்ல நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்படுகின்ற பொது அறக்கட்டளைகளில் உறுப்பினர்களாக Trustees ஆக நியமிக்கப்படுகிறவர்களுக்கு தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். முக்கியமாக அந்த அறக்கட்டளைகளுக்கு தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். குற்றம்சாட்டப்பட்டவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள், disqualify ஆனவர்கள், insolvent ஆனவர்கள் எல்லாம் பல்வேறு அறக்கட்டளைகளில் உறுப்பினர்களாக, தலைவர்களாக இருக்கிறார்கள். குடும்ப அறக்கட்டளை என்கிற பெயரில் பல்வேறு தவறுகள், பல்வேறு முறைகேடுகள் இன்றைக்கு நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நிதர்சனமான உண்மை. இப்படிப்பட்ட அறக்கட்டளைகள் அனைத்தும் கலைக்கப்பட வேண்டும்; கலைத்தெறியப்பட வேண்டும்.

2020 செப்டம்பர் 16] [திரு. சி.வி. சண்முகம்]

பிற்பகல் 3–25

பொது அறக்கட்டளைகள் எல்லாம் முறைப்படுத்தப்பட வேண்டும்; Regulate செய்யப்பட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் கட்டுப்பாடு எதனையும் விதிக்கவில்லை. Trust என்றால் என்ன? அதனுடைய நோக்கம் என்ன? Trust–க்கு definition இருக்க வேண்டும்; அதற்கு definition இல்லை. பொது அறக்கட்டளை என்றால் அதற்கு definition இல்லை. அதற்கு தற்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. Trust என்றால் என்ன? அந்த Trust எப்படி உருவாக்கப்பட வேண்டும்; அந்த அறக்கட்டளையில் யார் யாரெல்லாம் நியமிக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்; அறக்கட்டளை கொண்டு வரப்பட்டபோது, அதில் சொல்லப்பட்டிருக்கின்ற நோக்கம், முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். எப்படிக் கண்காணிக்க வேண்டும்? அதற்கான வழிமுறைகள் என்ன? தவறுகள் நடந்தால், அவர்களை disqualify செய்வதற்கு, நீக்குவதற்கு என்ன வழிமுறை? இவை அனைத்தும் தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டத்திலே இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அனைத்திற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சட்டம் என்று ஒன்று இல்லாத காரணத்தினால், இன்றைக்கு பல்வேறு அறக்கட்டளைகளில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அறக்கட்டளைகள் எல்லாம் யார் கையில் இருக்கின்றன? அதன் வருமானம் என்ன? அதன் நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தச் சட்டத்தின்படி அனைத்து அறக்கட்டளைகளும் பதியப்பட வேண்டும். இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவுடனேயே தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து பொது அறக்கட்டளைகளும், கண்டிப்பாக 3 மாதக் காலத்திற்குள் பதியப்பட வேண்டும். அதனைப் பதிவு செய்த பிறகு, அதில் தவறு இருந்தால், அறக்கட்டளையின் சார்பாக, சட்ட விதிகளின்படி, நடவடிக்கைகள் எடுப்பதற்கு அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, யாருக்காகவும், எந்தவித கெட்ட நோக்கத்தோடும் இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இது ஒரு நல்ல நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள அத்தனை பொது அறக்கட்டளைகளும் நல்ல நோக்கத்தோடு, சட்ட விதிகளின்படி, முறைப்படுத்தப்பட வேண்டும். பல மாநிலங்களில்

இதற்கான சட்டம் இருக்கின்றது, தமிழகத்தில் மட்டும் இல்லை. உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது, சில மாநிலங்களில் சட்டம் இல்லையென்பதால், அந்தந்த மாநில தலைமைச் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இதனைப் பரிசீலனை செய்து, தனியாக அந்தந்த மாநிலத்திற்கு பொது அறக்கட்டளை சட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியதன்பேரில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்து, தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு இன்றைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, இதனை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 43 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 43 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2020), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*